# வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்குவது எப்படி

ஜூன் 2010

Opening a bank account - Tamil

உங்களுக்கு அகதி என்கிற நிலை, மனிதநேயப் பாதுகாப்பு, தன்விருப்ப விடுப்பு (DLR) அல்லது தங்குவதற்கான வரையரையற்ற விடுப்பு (ILR) இருக்குமானால், ஸ்காட்லாந்து அல்லது ஐக்கிய ராஜ்யத்தின் (யு.கே) வேறு எந்த பகுதியிலும் வங்கிக்கணக்கு ஒன்றைத் தொடங்க உங்களுக்கு உரிமை உண்டு.

ஆயினும், வங்கி உங்களுக்காக கணக்கு ஒன்றினை ஆரம்பிக்கும் முன்பாக, அவர்கள் உங்களுடைய அடையாளம் மற்றும் தற்போதைய முகவரியினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

HAPPY TO TRANSLATE

இத்துண்டு அறிக்கை ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்குவதற்கு என்ன ஆவணங்கள் உங்களுக்குத் தேவைப்படும், எவ்வாறு கணக்கைத் தொடங்குவது, மற்றும் நாங்கள் எப்படி உதவக்கூடும் என்பதை அடையாளம் காட்டுகிறது.

**ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்க எனக்கு என்ன தேவை?**

ஒவ்வொரு வங்கியும் தனக்குத் தேவைப்படும் ஏற்கத்தக்க அடையாள ஆவணங்களின் பட்டியலை வகுத்து வைத்துள்ளது, மேலும் சில வங்கிகளுக்கு மற்றவற்றைக் காட்டிலும் கூடுதலான தகவல்கள் தேவைப்படலாம். சாதாரணமாக ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்க நீங்கள் உங்களுடைய

- அடையாளம்
- குடிநுழைவு நிலைமை மற்றும்
- முகவரி

ஆகியவற்றை உறுதிபடுத்தும் ஆவணங்களை வங்கிக்குத் தர வேண்டியிருக்கும்.
சாதாரணமாக பெரும்பான்மையான வங்கிகள் அசல் ஆவணங்களை அல்லது சான்றளிக்கப்பட்ட நகல்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளும் என்பதை குறித்துக் கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் **குறைந்தது ஒரு வடிவத்திலான அடையாளச் சான்றையாவது** நீங்கள் காண்பிக்க வேண்டியிருக்கும்:

- உங்களது நிலையை உறுதி செய்து உள்துறை அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் (அகதி நிலை, மனிதநேயப் பாதுகாப்பு, தன்விருப்ப விடுப்பு அல்லது தங்குவதற்கான வரையறையற்ற விடுப்பு) மற்றும் பணியாற்றுவதற்கான அனுமதி - அசல் ஆவணம் அல்லது உள்துறை அலுவலகத்தால் சான்றளிக்கப்பட்ட நகல்.
- அடையாளத்திற்கான உள்துறை அலுவலகத்தின் சான்றிதழ் - அசல் ஆவணம் அல்லது உள்துறை அலுவலக மேற்கோள் எண், உங்களுடைய பிறந்த தேதி மற்றும் ஆவணம் காலாவதியாகும் நாள் இவற்றுடன் கூடிய சான்றளிக்கப்பட்ட நகல்
- உங்களது ஆதாயமடையும் உரிமையை உறுதி செய்யும்படியான ஆதாய அறிவிக்கைக் கடிதம், அல்லது
- ஒரு குடிநுழைவு நிலைமை ஆவணம்

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் **குறைந்தது ஒரு முகவரிச் சான்றையாவது** நீங்கள் காண்பிக்க வேண்டியிருக்கும்:

- உங்களுடைய பெயர் மற்றும் தற்போதைய முகவரியைச் சுட்டிக் காண்பித்து உள்துறை அலுவலகத்திலிருந்து கடிதங்கள்
- உங்களுடைய பெயர் மற்றும் தற்போதைய முகவரியைச் சுட்டிக் காண்பிக்கும் கட்டணச்சீட்டுகள்
- அரசு முகமை ஒன்றிலிருந்து, உதாரணமாக பணிமையத்திலிருந்து, உங்களது பெயர் மற்றும் தற்போதைய முகவரியைச் சுட்டிக்காண்பிக்கும் ஒரு கடிதம், அல்லது
- உங்களுடைய பெயர் மற்றும் தற்போதைய முகவரியை சுட்டிக்காண்பிக்கும் ஒரு குத்தகை ஒப்பந்தம்

இதைவிட மேலும் அதிக விவரங்களை ஒரு வங்கி கேட்கக்கூடும், உதாரணமாக உங்களுடைய வருமானச் சான்று.

**நான் ஒரு வங்கிக் கணக்கு தொடங்க எங்கு செல்ல வேண்டும்?**

நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள வங்கியின் கிளைக்கு நீங்கள் செல்ல வேண்டியிருக்கும், மேலும் மேற்சொன்னபடி நீங்கள் யார், எங்கு வசிக்கிறீர்கள் என்பதைக் காட்டும் ஆவணங்களை உடன் எடுத்துச்செல்ல வேண்டியிருக்கும். லாயிட்ஸ் டிஎஸ்பி (TSB) மற்றும் பார்க்லேஸ் ஆகியவை நீங்கள் கருத விரும்பக்கூடிய சில வங்கிகளுக்கான உதாரணங்களாகும். நீங்கள்  கணக்கு தொடங்குவதன் பொருட்டு கலந்துரையாட வங்கியினுள் செல்லலாம் அல்லது சந்திப்புநியமனம் பெற வங்கியை முன்கூட்டியே அழைக்கலாம்.

உங்களுடைய உள்ளூர் கிளையின் விவரங்களை தொலைபேசி விவரத்திரட்டிலிருந்தோ அல்லது வங்கியின் இணையதளத்திலிருந்தோ கண்டுபிடிக்கலாம்.

**ஒரு வங்கிக்கணக்கு தொடங்க எவ்வளவு காலம் ஆகிறது?**

நீங்கள் செல்கிற வங்கியைப் பொறுத்து, விண்ணப்பச் செயல்முறை மாறுபடுகிறது. ஆனால், உங்களிடம் சரியான ஆவணங்கள் இருக்கிறவரை, அது சாதாரணமாக 2-3 வாரங்களுக்கு மேல் ஆகாது.

உங்களது விண்ணப்பம், மேலும் பரிசீலனைக்கு விசேடத் துறைக்கு சுட்டிக்கேட்டு அனுப்பப்பட வேண்டுமாயின், கணக்கைத் தொடங்க கூடுதலான காலமாகலாம். உங்களுடைய விண்ணப்பதைச் சுட்டிக்கேட்டனுப்பப் போகிறார்களா என்பதை வங்கிப் பணியாளர்கள் உங்களுக்குத் தெரிவிப்பார்கள் மற்றும் அதற்கான அவசியம் ஏன் என்பதையும் உங்களுக்கு விளக்குவார்கள். அவர்கள் உங்களின் விண்ணப்பத்தின் பேரில் ஒரு முடிவு எடுக்க எவ்வளவு காலம் ஆகும் என்பதையும் அடையாளம் காட்டுவர்.

Scottish Refugee Council, 5 Cadogan Square, (170 Blythswood Court), Glasgow G2 7PH  Tel: 0141 248 9799, Fax: 0141 243 2499,
www.scottishrefugeecouncil.org.uk
ஸ்காட்டிஷ் ரெஃப்யூஜீ கவுன்சில் என்பது ஸ்காட்லாந்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு அறக்கட்டளையாகும்.

**எனக்கு ஒரு அடிப்படை வங்கிக் கணக்கு வழங்கப்பட்டுள்ளது, அதைக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்?**

ஒரு அடிப்படை வங்கிக் கணக்கானது அடிப்படை வங்கிச் சேவைகளை அளிக்கிறது. அதை நீங்கள் பணம் செலுத்தவும் எடுக்கவும் பயன்படுத்தலாம்.

ஒரு அடிப்படைக் கணக்கின் மூலம் நீங்கள்:

- ஒரு பயன் முகமை அல்லது ஒரு பணியமர்த்துனர் போன்ற வெளி நபர்களிடமிருந்து நேரடியாக உங்களது கணக்கில் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- பிறருக்கு மின்னணு 'நிலையாணை' வழியே அல்லது ஒரு முறை மட்டும் செய்யக்கூடிய பரிமாற்றத்தின் மூலம் பணம் வழங்க முடியும்.
- பிறரை நேரடியாக உங்களுடைய கணக்கிலிருந்து பணத்தை 'நேரடிப் பற்று' மூலம் எடுக்க அனுமதிக்க முடியும், மற்றும்
- பணம் வழங்கு இயந்திரங்களிலிருந்து உங்களுடைய பணத்தை எடுக்க அனுமதிக்கும் பொருட்டு 'பற்று அட்டை' ஒன்றைப் பெற முடியும். இணையம் மூலமாக அல்லது கடைகளில் பொருட்களை வாங்க முடியும் (வங்கியிடம் சரிபார்க்கவும்).

**நான் பயன்படுத்தும் சேவைகளுக்காக நான் கட்டணம் செலுத்த வேண்டியிருக்குமா?**

பெரும்பாலான அடிப்படைக் கணக்குச் சேவைகள் இலவசமானவை. ஐக்கிய ராஜ்யத்திலுள்ள (யு.கே) பெரும்பாலான பணம் வழங்கு இயந்திரங்களைப் பயன்படுத்த நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும், நீங்கள் உரிமை வழங்கியுள்ள ஒரு நேரடி பற்றுக்கான பண வழங்கல் கெடுவாகும்போது, உங்களது கணக்கில் போதுமான அளவு பணம் இல்லை என்றாலோ அல்லது போதுமான பணம் உங்கள் கணக்கில் இல்லை என்பதால் பணம் வழங்கல் மறுக்கப்பட்டது என்றாலோ உங்களுடைய வங்கிகள் உங்கள் மீது கட்டணம் விதிக்கக் கூடும்.

**என்னால் ஒரு வங்கிக் கணக்கு தொடங்க முடியவில்லை எனில், அதற்கான தேர்வுரிமைகள் என்ன?**

உங்களால் ஒரு வங்கிக் கணக்கு தொடங்க முடியவில்லை எனில், நீங்கள் ஒரு அஞ்சலக அட்டைக் கணக்கு தொடங்க விண்ணப்பிக்கலாம். இது வங்கிக் கணக்கைத் தொடங்க முடியாத ஆதாயம் பெறுவோர், மாநில ஓய்வூதியங்கள் மற்றும் வரி வரவுத் தொகைகளைப் பெறுவோர் போன்றவர்களுக்காகக் கிடைக்கப்பெறும் எளிய வகைக் கணக்கு ஆகும். இதன்மூலம் வீட்டுவசதிப் பயன், பணிசார் ஓய்வூதியங்கள் அல்லது உங்களது பணியமர்த்துநரிடமிருந்து சம்பளம் போன்ற வேறு பணம் வழங்கல்கள் எதுவும் செய்ய முடியாது. இக்கணக்கில் உங்களுடைய சொந்த வைப்புகள் எதையும் செய்ய முடியாது.

நீங்கள் ஆதாயங்களைப் பெற்று வருவீர்களானால், உமது உள்ளூர் பணிமையத்திடம் உங்களுக்கு ஒரு 'அழைப்புக் கடிதம்' தருமாறு கேளுங்கள். அதன் மூலம் நீங்கள் ஒரு அஞ்சலக அட்டைக் கணக்கு தொடங்க அனுமதிக்கப்படுவீர்கள். அவ்வழைப்புக் கடிதத்தையும் உங்களது குடிநுழைவு நிலைக்கான ஆவணத்தையும் உள்ளூர் அஞ்சலகத்திற்கு கணக்கு ஒன்றைத் தொடங்க எடுத்துச் செல்லவும்.

ஒரு அஞ்சலக அட்டைக் கணக்கானது, எந்த அஞ்சலகத்திலும் அவர்கள் தரும் பற்று அட்டையை உபயோகித்து இலவசமாக பணம் எடுக்க உங்களை அனுமதிக்கும்.

**நான் இடம் மாறினால் என்ன செய்வது?**

நீங்கள் வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்கிவிட்டாலே, எப்பொழுதும் உங்களுடைய முகவரி மாறும்போது எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக வங்கிக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துங்கள்.

**ஸ்காட்லாந்து அகதி மன்றம் எவ்வாறு எனக்கு உதவ முடியும்?**

நீங்கள் ஒரு வங்கிக் கணக்கிற்கு விண்ணப்பித்திருந்து, கணக்கு தொடங்குவதில் வெற்றி பெறாமலிருந்தால், நீங்கள் எங்களை அறிவுரைக்காக தொடர்பு கொள்ளலாம். எங்களுடைய **இலவச தொலைபேசி எண் 0800 085 6087** யில் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம். இந்த எண் தரைவழித் தொலைபேசியிலிருந்து மட்டும் இலவசமாகும்.

தேர்வுரிமைகளைப் பற்றி நீங்கள் விவாதிக்க ஒரு வங்கியுடன் நாங்கள் சந்திப்புத்திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து தருவோம். மற்றும் உங்களுக்கு ஆதரவாக சந்திப்புத்திட்டத்திற்கு உங்களுடன் செல்வோம். ஒரு கணக்கு தொடங்க முதலில் நீங்களாக முயற்சி செய்து, ஆனால் அது இயலமால் போன **பிறகே** இந்த ஆதரவைத் தருவோம் என்பதைக் குறித்துக் கொள்ளவும்.

**நிதி சம்பந்தமான ஒரு இலவசப் பயிலரங்கத்தில் கலந்து கொள்ளுங்கள்**

நீங்கள் வங்கிக் கணக்குகள், மேலாண்மை மற்றும் கடன் பெறுதல் பற்றியோ, அல்லது வியாபாரம் ஒன்றினைத் துவங்குவதற்கான ஆரம்பப் படிகளை எடுத்துவைப்பது பற்றியோ கூட மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால், உங்களுக்கு எமது இலவச நிதியியல் படிப்பறிவுத் திட்டப்பணி பயிலரங்குகள் சிறந்த தொடக்கப் புள்ளியாகும்.

மேலும் விபரங்களுக்கு மின்னஞ்சல் செய்யவும்: carolanne.nehme@scottishrefugeecouncil.org.uk

**தொலைபேசி:** 0141 223 7971 **அலைபேசி:** 07734 030761